சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 118/2010

**DW 1 பரமசிவம்** **10.06.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு தாக்கல் செய்துள்ள கவிதாமணி எனது சகோதரியின் மகள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி மயிலாத்தாள் என் சகோதரி என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் தகப்பனார் ராமசாமிக்கவுண்டரின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் எனக்கும், இறந்துபோன என் சகோதரிக்கும், 3 ம் பிரதிவாதிக்கும் சரி பங்கு உள்ளது என்றால் சரியல்ல. 1993 ல் ஒரு பாகம் பங்கியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு எவ்வித பாகமும் ஏற்படவில்லை என்றாலும் அது குறித்த விபரம் எதுவும் 3 ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. 3 ம் பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்பதற்காக ஏற்கனவே பாகம் ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என் சகோதரிகள் சொல்லித்தான் நானும் என் சகோதரர்களும் பாகம் பங்கிக்கொண்டோம். நான் சொல்லும் பாகப்பத்திரத்தில் 3 ம் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். 10.06.1997 மயில்சாமி உயில் எழுதிவைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மயில்சாமி உயில் எழுதிவைக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்யும் வரை வாதியோ, மற்ற பிரதிவாதிகளோ பாகம் கோரவில்லை என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

02.02.1999 ல் மயில்சாமி இறந்தபின் உயில் நடைமுறைக்கு வந்து அதை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த உயிலும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. பாக சொத்துக்களில் 3 ம் பிரதிவாதிக்கு சம பங்குள்ளது என்றாலும் அதை கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் உயில்களை நிராகரித்து 3 ம் பிரதிவாதிக்கு சேரவேண்டிய பங்கு சொத்தை பிரித்துக்கொடுக்கவேண்டுமென்றால் சரியல்ல.

**12 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி